THE HON. THIRU MADHAVAN: Sir, I move "That the Tamil Nadu Payment of Salaries (Second Amendment) Bill, 1973 (L.A. Bill No. 39 of 1973) be passed."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி: முதலமைச்சரவர்கள் ரொம்பவும் சாமர்த்தியமாக சொல்லிவிட்டார்கள். வருடத்திலே சுமார் 60 நாட்களுக்குத்தான் உட்காருகிறோம். இந்த 10 ரூபாய் அதிகம் என்று ஏமாற்றப் பார்க்கிறார். அலவன்ஸ் 100 ரூபாய் இன்கிரீஸ் ஆகிறதா, அதுதான் வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் நேரத்தை இன்னும் சிறிது நேரம் அதிகமாக எடுத்துக்கொண்டு இந்து சமய அறக்கட்டளைகள் மசோதாவை முடித்துவிடலாம் என்று நினைக்கிறேன்

(ஈ) தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண் 38/73)

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு 1973-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாவது திருத்த) சட்டமுன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 38/1973) பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்" என முன் மொழிகிறேன்.

தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1959) 117-வது பிரிவின்படி தமிழ்நாட்டில் செயலில் உள்ள ஏதேனும் ஒரு சட்டத்தில் அல்லது

---

* 29—11—1973-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1973 டிசம்பர் 3] [திரு. மு. கண்ணப்பன்]

அத்தகைய சட்டத்தின் கீழ் செய்யப்பட்டு இம்மாநிலத்தில் செயலிலுள்ள ஓர் அறிவிப்பு, ஆணை, திட்டம், விதி, படிவம் அல்லது துணை விதியில் கண்டுள்ள வாரியம் அல்லது அதன் தலைவர் அல்லது அதன் ஆணையாளர் ஒருவர் பற்றிய குறிப்பீடு எதுவும், 1951 செப்டம்பர் 30-ஆம் நாள் முதற்கொண்டு, அச்சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்டுள்ளதாக கருதப்படும் ஆணையாளர் பற்றிய குறிப்பீடாகக் கருதப்பட வேண்டும்.

சென்னை, உயர்நீதி மன்றம், 1970-ஆம் ஆண்டின் 1016-ஆம் எண் ரிட் மனு குறித்த தனது தீர்ப்பில், அச்சட்டத்தின் மேற்படி 117-வது பிரிவின் செயல் வரம்பினைப் பற்றியும் பரிசீலித்தது. 117-வது பிரிவின் கீழ், ஆணையாளர் மட்டுமே வாரியத்திற்குப் பதிலாகச் செயல்பட முடியும் என்றும், பரம்பரை அறங்காவலர் அல்லாத அறங்காவலர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோர உதவி ஆணையாளருக்கு முதற்கண் அதிகாரம் கிடையாது என்றும் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. எனவே, அந்த நேர்வுகளில் அறங்காவலர்களை நியமிப்பதற்கு ஆணையாளரே அதிகாரமுடையவராவார். பட்டியலில் சேராத பல கோவில்கள் இத்தகைய விதித்துறைகளைக் கொண்ட திட்டங்களை வைத்திருக்கலாம். இந்த நேர்வுகள் அனைத்திலும், ஆணையாளரே விண்ணப்பங்கள் கோர முடியாது. எனவே, இத்தீர்ப்பினால் ஏற்பட்ட இடர்ப்பாட்டினைத் தவிர்ப்பதற்காக, இந்து சமய அறக்கட்டளைகள் துறை ஆணையாளர், தனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களில் எதையேனும் துணை ஆணையாளருக்கு அல்லது உதவி ஆணையாளருக்குப் பிரித்து கொடுக்க அதிகாரம் அளிக்கும் வகையில், தமிழ்நாடு 1959-ம் ஆண்டு 22-வது சட்டத்தின் 117-வது பிரிவைத் திருத்துவது அவசியமெனக் கருதப்படுகிறது.

இப்பிரேரணையை இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ள வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, I am opposing this amendment on an important ground.

Already appointment of trustees has become so important in the function of Religious Endowments Board. There are so many complaints of partiality, etc., it may be well-founded or ill-founded.

But it exists there. There are non-listed temples. It is the trustees who are responsible for good management of temples. So, the appointing power of trustees should not be delegated to Assistant Commissioners. If it stops with Deputy Commissioner, it is all right, but not to the Assistant Commissioner.

In certain cases certain things had happened. I do not want to publish but I can tell the same to the Hon. Minister in person. I know that when permission was given for purchase of a car, a matathipathi bought an Impala car. Does a matapathipathi require an imported Impala car for going round? If power is delegated to Assistant Commissioners for appointment of trustees, it may lead to abuses. It is well-known how temple properties are mismanaged already, and how houses which could fetch Rs. 100 as rent per month have been given for a rent of Rs. 10 per month. So I oppose the delegation of powers of appointment of trustees to Assistant Commissioners. If it stops with the Deputy Commissioner, it is all right. That is what I want to say.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, இந்த அதிகாரத்தைப் பிரித்து வழங்குவதை எதிர்ப்பதாக மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்னார்கள். ஏற்கெனவே பட்டியலில் சேர்ந்துள்ள ஆலயங்களுக்கு ஆணையாளர்தான் நியமனம் செய்யக் கூடிய அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள். 20,000 ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ள ஆலயங்களுக்கு அறங்காவலர்களை நியமனம் செய்யும் அதிகாரத்தை உதவி ஆணையர்தான் பெற்றிருக்கிறார். முதலிலே வாரியமாக இருந்த நேரத்தில் வாரியத்திற்கு விண்ணப்பம் செய்ய வேண்டுமென்றிருந்தது. பிறகு வாரியத்தின் தலைவர் என்பதற்குப் பதிலாக ஆணையர் என்று வந்ததும், உதவி ஆணையர் நியமனம் செய்கின்ற கோயில்களுக்கும் ஆணையர்தான் விண்ணப்பம் கோர வேண்டுமென்று சட்டத்தில் இருக்கிறது. அதை மாற்றி உதவி ஆணையர் வாங்கலாம் என்பதற்குத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறோமே தவிர இதில் பிரச்சினை வேறெதுவும் இல்லை என்று கூறி இதை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1973 டிசம்பர் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக்கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்ட முன்வடிவு எண். 38/1973) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவரவர்களே,

"தமிழ்நாடு, 1973-ஆம் ஆண்டு, இந்து சமய அறக் கட்டளைகள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டப்பேரவை சட்டமுன்வடிவு எண் 38/1973) நிறைவேற்றப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

4. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) பேரவை அலுவல் வரிசையில் மாற்றம்

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பேரவை விதி 21 (3)-ன் கீழ், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்.

"நிகழ்ச்சி நிரலில் உள்ள இனம் 3—அரசினர் தீர்மானத்தை, இனம் 2, உள் இனம் (4)-க்கு அடுத்து எடுத்துக் கொள்ள வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.